அண்டுக்குவி கிளை நூலகம்

# பிரதமர் வி. பி. சிங் அரசின் பெரும்பான்மையை நிருபிக்க, நவம்பர் 7-ம் திகதி வரை காலக்கெடு


விலை ரூபா 3-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 ஐப்பசி: 8 நூ ஆகிர் பிறை: 5 இதழ்: 183
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 25-10-1990


(புதுடில்லி)

பிரதமர் திரு. வி. பி சிங்கின் தலைமையிலான தேசிய முன்னணி அரசுக்கு பாராளுமன்றத்தில் தனது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிப்பதற்கு அடுத்தமாதம் 7ம் திகதி வரை காலக்கெடு வழங்கப்பட்டுள்ளதாக இந்திய ஜனதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் நேற்று உத்தரவுபிறப்பித்துள்ளார்.

பிரதமர் பதவியில் ஒட்டிக்கொண்டிருக்கத்தான் விரும்பவில்லை என்றும், பாரத அரசின் சமய சார்பற்ற கொள்கையின் உறுதியை நிரூபிக்க திடசங்கற்பம் எடுத்துள்ளதாவும் பிரதமர் திரு வி. பி. சிங் மீண்டும் வலியுறுத்திவுள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## நீடித்த காலக்கெடு; பாரதீய ஜனதா அதிருப்தி

(புதுடில்லி)

தேகிய முன்னணி அரசுக்கு உருவாகியுள்ள அரசியல் நெருக்கடியை அடுத்து, பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு காலதாமதம் காட்டியியிருக்ககூடாது என்று பாரதிய ஜனதாக்கட்சியின் மூத்த தலைவர்கள் இந்திய ஜனதிபதி மீது அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

பாரதிய ஜனதாக் கட்சி அரசுக்கு தனது ஆதரவை விலக்கிக்கொண்டதை அடுத்து ஆட்டங்கண்டுள்ள தேசிய முன்னணி அரசை காப்பாற்றுவதற்காக ஆள் சேர்க்க அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக மேற்படி கட்சித் தலைவர்கள் மேலும் குறைகூறியுள்ளனர்.

சிக்கலான அரசியல் நெருக்

[4ம் பக்கம் பார்க்க]

சாவகச்சேரி, மட்டுவில், சரசாலையில்

# அகோர பொம்மர் தாக்குதல்: ஒருவர் பலி; 16 பேர் படுகாயம்!

## சந்தைப் பகுதியில் 50 கட்டிடங்கள் சேதம்!

(நாவற்குழி நிருபர்)

**சாவகச்சேரி, மட்டுவில் சரசாலைப் பகுதிகளில் நேற்று பொம்மரிலிருந்து நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல்களினுல் ஒருவர் பலியானுர், 16 பேர் படுகாயமடைந்தனர். வீடுகள், கடைகள் உட்பட ஐம்பதிற்கும் அதிகமான கட்டிடங்கள் சேதமடைந்தன.**

நேற்றுக்காலை பத்து மணியளவில் சாவகச்சேரி சந்தைப் பகுதியைச் சுற்றி பல தடவை மூன்று பொம்மர் விமானங்கள் சுற்றி வட்டமிட்டதுடன் ஆறுதடவைகள் கீழே பதிந்து சந்தையில் நின்ற பொதுமக்கள் மீது குண்டுகளை வீசியது.

இதனுல் சந்தைப்பகுதியிலுள்ள அரிசிக்கடை முற்ருகச் சேதமடைந்ததுடன் அங்கு நின்றவர்களில் ஒருவர் தலை சிதறிப் பலியானுர். ஏழு பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் ஆ. நாகூரன் நாவாந்துறை என்பவரே பலியானவராவார்.

இதுவரது சடலம் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

சிவா ஸ்ரோர்ஸ் என்னும் வியாபார நிலையத்திலிருந்த தேங்காய் எண்ணெய் பரல்கள் சிதறியுள்ளன. இதன் சிதைவுகள் மருதமரத்தில்

(4-ம் பக்கம் பார்க்க)

## காயமடைந்தோர் விபரம்

(நாவற்குழி)

சாவகச்சேரி, மட்டுவில் பகுதிகளில் இடம்பெற்ற விமானத்தாக்குதலினுல் காயமடைந்தோர் விபரம்:

ஜ. சிவலோகநாதன் (21) சங்கத்தானை, வே. விஜயகுமார் (30) சங்கத்தானை, க. கதிர்காமு (51) சாவகச்சேரி, க. ராசன் (25) சாவகச்சேரி, சி. தேவராசா (26) தியேட்டர் லேன், இணுவில், தி. திலீபன் (11), சாவகச்சேரி, க. கனகசபாபதி (28) சங்கத்தானை.

ஏ. இராசு (25) சாவகச்சேரி, எஸ். செல்வராசா (25) மீசாலை, ஐ. சத்தியதேவன் (22) மீசாலை, இ.

(4-ம் பக்கம் பார்க்க)

## கீரிமலையில் புலிகள்-ராணுவம் மோதல்; இரு படையினர் பலி!

### புலிகள் தரப்பில் ஒருவர் வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளுக்கும், சிங்கள இராணுவத்துக்குமிடையில் நேற்று கீரிமலைப் பகுதியில் நடைபெற்ற கடும் மோதலில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். விடுதலைப்புலிகள் தரப்பில் ஒருவர் வீரமரணம் அடைந்ததாக விடுதலைப் புலிகளின் செய்திகள் கூறுகின்றன.

நேற்று பகல் பொம்மர், ஹெலி போன்றவற்றின் உத

[4-ம் பக்கம் பார்க்க]

## சினைப்பர் தாக்குதலில் இரு ராணுவம் பலி ஒருவர் காயம்

(நாவற்குழி)

ஆனையிறவு இராணுவ முகாமை நோக்கி விடுதலைப் புலிகள் சினைப்பர் தாக்குதல் மேற்கொண்டதினுல் இரண்டு இராணுவ சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். ஒருவர் காயமடைந்தார். (107)

## பொம்மர், ஹெலி நோட்டம்

(ஒட்டுசுட்டான்)

தண்ணீரூற்று, முள்ளியவளைப் பகுதிகளில் ஹெலியும், பொம்மரும் அடிக்கடி நோட்டமிட்டு வருகின்றன.

ஏற்கனவே பல தடவை பொம்மர் ஹெலி தாக்கியதால் அப்பகுதி மக்கள் அச்சத்துடனே வாழ்கின்ருர்கள். (144)

யாழ். மாவட்ட

## புள்ளிவிபரக் கைநூல் மூலப் பிரதி தயாரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட புள்ளிவிபரக் கைநூல்-1990 சம்பந்தமான சமூக பொருளாதாரச் சிறப்பியல்புகள் அடங்கிய விபரங்கள் யாவும் புள்ளிவிபர திணைக்களத்தால் சேகரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நூலை அச்சிட்டு வெளியிடுவதில் காலதாமதங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (153)

## புலிகள் தாக்குதல் நான்கு படையினர் பலி!

(மட்டுநகர்)

மட்டுநகர் வாகரை புகையிரத பாதைவழியாக இராணுவத்தினர் ரோந்து சென்றபோது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் நாலு இராணுவத்தினர் அதே இடத்தில் கொல்லப்பட்டதாகவும் பலர் படுகாயமடைந்ததாகவும் தெரியவருகின்றது. (வி)

## பொலிசார் படுகாயம்

(மட்டுநகர்)

மட்டுநகர் பஸ் நிலையத்தில் பொலிஸார் மீது விடுதலைப் புலிகள் கைக்குண்டு வீசியதில் இருபொலிஸார் படுகாயமடைந்ததாகக் கூறப்படுகின்றது. (வி)

அரச அலுவலகங்கள்

## நேற்று மீண்டும் ஆரம்பம் பாடசாலைகள் இயங்கவில்லை

(யாழ்ப்பாணம்)

ஊரடங்குச்சட்டம் நீக்கப்பட்டபின்னர் நேற்று யாழ். நகரிலுள்ள வங்கிகள், யாழ். செயலகம் உட்பட அரச திணைக்களங்கள் பல வழமை போல இயங்கின.

பாடசாலைகள் ஆரம்பிப்பதற்காக நேற்றுக்காலை திறக்கப்பட்டபோதிலும் மாணவர்கள் எவரும் சமுகமளிக்கவில்லை.

ஆசிரியர்களின் வரவு மிகக் குறைவாக இருந்தது. இதனுல் பாடசாலைகள் இயங்கவில்லை.

வலிகாமம் வடக்குத் தவிர்ந்த ஏனைய இடங்களில் நேற்றுமுன்தினம் தொடக்கம் ஊரடங்குச்சட்டம் நீக்கப்பட்டது தெரிந்ததே. (153)

## பாரதீய ஜனதா கட்சியின் பந்தில் 17பேர் பலி!

### 2 மாநிலங்களில் ஊரடங்கு

(புதுடில்லி)

பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் கைதானதையடுத்து, நேற்று இந்திய மாநிலங்களில் நடந்த 'பந்த்' ஆர்ப்பாட்டங்களில் நிகழ்ந்த வன்செயல்களுக்கு 17 பேர் பலியாகியுள்ளனர்.

வட மாநிலங்களான குஜராத், ஜெய்ப்பூர் ஆகியவற்றில் வன்செயல்களை அடுத்துக் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்த வன்செயல்கள் இடம்பெற்ற அகமபாத்தில் ஐந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பம்பாயில், ரயில் பாதையில் தடைகள் போடப்பட்டதன் காரணமாக ரயில் ஒன்று தடம் புரண்டது.

கர்நாடக மாநிலத்தில் ஒரு

(4-ம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடாத்தும்

# மாவீரர் தின கலை, கலாசாரப் போட்டிகள்

தமிழீழ மக்களே!

★ இவ்வாண்டு மாவீரர் தினத்தையொட்டி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் எழுத்தாளர், கலைஞர்கள், மற்றும் இத்துறையில் ஆர்வமிக்கோர், மாணவர்கள் அனைவரையும் ஊக்குவிப்பதற்காகவும், அவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்காகவும் கலை கலாசாரப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

★ இப்போட்டிகள் கீழ்க்காணும் விடயங்களில் நடைபெறவுள்ளன.

★ நாவல் ★ சிறுகதை ★ கவிதை
★ கட்டுரை ★ சுவரொட்டி

★ போட்டிகள் அனைத்தும் மாணவர்களுக்கு வேறாகவும் மற்றையோருக்கு வேறாகவும் இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளது.

★ தமிழீழத்தில் அதியுயர் கௌரவமிக்க பரிசுகள் வழங்கப்படவுள்ள இப்போட்டிகளில் ஆர்வமும் ஆற்றலுமிக்க அனைவரும் கலந்துகொள்ளலாம்.

## போட்டிகளுக்கான விதிமுறைகள்

★ தமிழீழ மக்கள் எவரும் கலந்துகொள்ளலாம்.

★ படைப்புக்கள் யாவும் தமிழீழ விடுதலைப் போரை அடிப்படையாகக் கொண்டு அதனை முன்னெடுத்துச் செல்லும் கருத்துக்கள் செறிந்ததாகவும், சமகால எமது மண்ணினதும் மக்களதும் பிரச்சினைகளை அடிநாதமாகக் கொண்ட யதார்த்தத் தன்மை மிக்கதாகவும் இருத்தல் அவசியம். மண் மீட்புப் போரில் இன்னுயிர் ஈந்த வீரவேங்கைகளினதும், வீராங்கனைகளினதும் உணர்வுகளையும், இதயதாகத்தையும் பிரதி பலித்தல்வேண்டும்.

★ சுவரொட்டிக்கான கருப்பொருள்களும் மேற்குறிப்பிட்ட தன்மை மிக்கதாகவே இருத்தல் வேண்டும்.

★ இலக்கியப் படைப்புகள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதப்பட்டதாக அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

★ ஒவ்வொரு படைப்பிலும் மூன்று பிரதிகள் அனுப்புதல் வேண்டும்.

★ சிறுகதைகள் 10 பக்கங்களுக்கு மேற்படாததாகவும் நாவல்கள் 100 பக்கங்களுக்குக் குறையாததாகவும் இருத்தல் வேண்டும்.

★ கவிதைகள் 60 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ சுவரொட்டிகள் யாவும் 'ஆர்ட்போட்' டில் 60 cm x 40 cm அளவு கொண்டதாக வண்ணப் படங்களாகவோ (எந்த வண்ணமும் உபயோகப்படுத்தப்படலாம்) கறுப்பு வெள்ளைப்படங்களாகவோ வரைந்து அனுப்பலாம்.

★ போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களது படைப்புக்கள் அவர்களது பாடசாலை அதிபர் அல்லது வகுப்பாசிரியர் ஆகியோர் மூலம் அவர்களது சொந்தப்படைப்புத்தான் என்பது உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

★ போட்டிக்கான கட்டுரைகள் 3000 - 5000 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் நல்லது.

★ போட்டிகளுக்கான படைப்புகள் அனுப்பப்பட வேண்டிய இறுதித் திகதி 25-10-1990.
அனைத்து ஆக்கங்களும் "ஈழநாடு" அலுவலகத்திற்கே குறிப்பிட்ட திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்படல்வேண்டும்.

★ தகுதிவாய்ந்த நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியாகும்.

## மாணவர்க்கான போட்டிகள் பற்றிய சிறப்பு விதிகள்

★ மாணவர்க்கான போட்டிகள் பின்வரும் விடயங்களில் நடைபெறும்.
(1) சிறுகதை (2) கவிதை (3) கட்டுரை (4) ஓவியம்

★ சிறுகதை, கவிதை, ஓவியம் ஆகியன மேலே குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

★ ஓவியங்கள் 18'' x 12'' அளவு கொண்டதாக இருத்தல் வேண்டும்.

★ கட்டுரைகள் கீழ்வரும் அம்சங்களைக் கொண்டதாகவும் 2500 சொற்களுக்கு மேற்படாததாகவும் அமைதல் வேண்டும்:
1. விடுதலைப் போராட்டமும் மாணவர் பங்களிப்பும்.
2. தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தி
3. தமிழீழ மாணவர்களது கல்வியின் எதிர்காலம்.
4. இன்றைய சூழ்நிலையில் மாணவர்களின் சமூகப்பணிகள்.
5. ''போராடுவதற்காகக் கற்போம்''.

★ மாணவர்களுக்கான போட்டிகள் யாவும் கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பகுதிகளாக நடாத்தப்படும்.
15 வயதிற்குட்பட்டோர் கீழ்ப்பிரிவு
15—17 வயதிற்கிடைப்பட்டோர் மத்தியபிரிவு
17 வயதிற்கு மேற்பட்டோர் மேற்பிரிவு

★ ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியாக பரிசுகள் வழங்கப்படும்.

---

டீசல் தட்டுப்பாட்டின் எதிரொலி

# முல்லையில் 25,000 ஏக்கர் வயல் தரிசாக கிடக்கிறது

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான பெரும் போக நெல் பயிர்ச் செய்கை ஏற்பாடுகள் முடிவடைந்து 75 வீதத்திற்கு மேற்பட்ட நெல் காணிகள் தரிசாக கிடக்கின்றன.

அரசு டீசல் கொண்டு வருவதற்கு தடை விதித்ததனால் இருபத்தையாயிரம் ஏக்கர் நெல் காணிகள் நெல்சாகுபடி செய்யாமல் தரிசாகக் கிடக்கிறது.

எருத்துமாடுகள் வைத்திருப்பவர்களே தலா 3 ஏக்கர் தொடக்கம் 5 ஏக்கர் வரை உழுது நெல் விதைத்துள்ளார்கள். டீசல் கள்ளச் சந்தையில் கூடுதலான விலை விற்பதால் ஏனையோரின் வயல் காணிகள் விதைக்கப்படவில்லை.

கள்ளச் சந்தையில் டீசல் வாங்கி 3 ஏக்கர் வயல் விதைப்பதற்கு சுமார் பத்தாயிரம் ரூபாவுக்கு டீசல் மட்டும் வாங்க வேண்டுமென ட்ராக்டர் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இக்காலபோகத்தில் கூடுதலான ஏக்கரில் நிலக்கடலை பயிர்ச் செய்கை நடைபெறுகிறது. (144)

---

## சித்தன்கேணியில் அகதிகள் தஞ்சம்

(வட்டுக்கோட்டை)

பலாலியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்று வரும் பயங்கர மோதல்களையடுத்து தெல்லிப்பழை, மல்லாகத்தில் உள்ள மக்கள் இடம்பெயர்ந்து வந்து சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

திருகோணமலையிலிருந்து இடம் பெயர்ந்து மல்லாகத் தஞ்சமடைந்திருந்தவர்கள் பொம்மர், ஹெலி, பீரங்கித் தாக்குதல்களுக்கு அஞ்சி இரவோடு இரவாக மல்லாகத்திலிருந்து வெளியேறி இப்பாடசாலையில் தங்கியிருக்கிறார்கள். (139)

---

## தீவுப் பகுதியில் போக்குவரத்தின்மையால் பொருள்கள் விலையேற்றம்

(யாழ்ப்பாணம்)

பண்ணை வீதியின் திருத்த வேலைகள் இன்னமும் முடிவடையாததால் தனியார் வியாபாரிகள், லொறிகள், வான்கள் மூலமாகப் பொருள்களைத் தீவுப் பகுதிக்குக் கொண்டுவரமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அராலித்துறையில் வள்ளங்களில் ஏற்றப்பட்டு, பின்பு சைக்கிளில் கொண்டுவரப்படும் பொருள்களை வியாபாரிகள் வாங்கி, சரவணை, வேலணை, புங்குடுதீவு முதலிய இடங்களில் கூடிய விலைக்கு விற்கிறார்கள். யாழ். நகரில் கிலோ 34 ரூபாவாக உள்ள சீனி தீவுப்பகுதியில் 48 ரூபாவாகவும் விற்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் 16 ரூபாவாக உள்ள மண்ணெண்ணை தீவுப் பகுதியில் 25 ரூபாவாகவும் விற்கப்படுகிறது. இதே போன்று எல்லாப் பொருள்களின் விலையும் அதிகரித்துள்ளது.

இதனால் இடம் பெயர்ந்து வந்தவர்களும், இங்குள்ள தீவுப்பகுதி மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

---

## குருநகர் புனித யாகப்பர் தேவாலயத்தை திருத்த ரூ. 12 லட்சம் செலவாகும்

### ஆராதனைகள் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கடந்த நான்கு மாதங்களாக யுத்த நிலைமை காரணமாக மூடப்பட்டிருந்த குருநகர் புனித யாகப்பர் தேவாலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் மீண்டும் திருப்பலி ஆராதனைகள் தொடங்கியுள்ளது.

ஷெல் தாக்குதல், கடற் பீரங்கித்தாக்குதல் ஆகியவற்றினால் சேதமடைந்த குருநகர் புனித யாகப்பர் தேவாலயத்தை மீண்டும் திருத்தி அமைப்பதற்கு பன்னிரண்டு லட்சம் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளதாக பங்குத்தந்தை அருட்திரு. பி. எம். இம்மனுவேல் தெரிவித்தார்.

குருநகர் பகுதியில் முற்றாக வீடுகள் சேதமடைந்த குடும்பங்களுக்கு, ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 600 தென்னங்கிடுகுகள் இலவசமாக மனித முன்னேற்ற நடுநிலையத்தால் வழங்கப்படவிருக்கிறது.

1862-ம் ஆண்டு மேற்படி தேவாலயம் ரோமன் கிறேக்க சிற்ப முறைப்படி அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. [153]

---

## இராசி பலன்

வியாழக்கிழமை
25 - 10 - 1990

ஷஷ்டி மு. ப. 8. 07 வரை பூராடம் மு. இ. 10 - 16வரை சித்தமோகம் இராகுகாலம் பகல் 132 முதல் 3.02 வரை நல்ல நேரம் காலை 7.32 முதல் 9. 02 வரை.

மேஷம்:- மனதில் களிப்பு, தொழில் லாபம், நல்லோர் சந்திப்பு புதிய முயற்சி.

இடபம்:- விரும்பதகாத உறவு வீண் பழி கேட்டல் அநாவசிய தலையீடு வைத்திய செலவு.

மிதுனம் பணக்கஷ்டம், அதிகாரிகள் பாராட்டு, மன விகாரம், அரசியல் விரோதம்

கடகம்; பணவரவு புத்திரர் கவலை.

சிங்கம்:- வீண்கவலை மனைக் கஷ்டம் பயணம், பெற்றோர் சச்சரவு.

கன்னி;- கைப்பொருள் தவறுதல்பயணங்களால்அலைச்சல் வீண்வாதம். நண்பருதவி

துலாம்:- வீட்டில் விருந்துபசாரம் காரிய வெற்றி, உறவினர் வருகை, தொழில் முதலீடு.

விருச்சிகம்:- தொழில் சிந்தனை பெரியோர் பகை, பெண் நேசம், கடித உறவு.

தனுசு:- பொதுப்பணி, மனக்குமுறல் சகோதர உதவி காரியதாமதம், கடன் வரவு.

மகரம்:- வீண்செலவு, அயலவர் பகை,தொழில் பாதிப்பு குடும்ப மனஸ்தாபம்.

கும்பம்:- பணவரவு, அந்நிய வாசம், தேடியது கிடைக்கும், மனநிறைவு,

மீனம்;- தொழில் மாற்றம், குடும்ப மகிழ்ச்சி, அறிஞர் சந்திப்பு, ஆலயதரிசனம், வெற்றிவாய்ப்பு.

ஜோஸ்யர்.

---


## வரி விளம்பரம்

### மில்க்வைற் செய்தி

1990ல் மாதாந்தம் பெற்றுக்கொள்ளப் பதியப்பட்டவை டிசம்பர் மாதத்துடன் முடிவடைகின்றது. 1991ல் மில்க்வைற் செய்தி வருடம் முழுவதும் பெற்றுக்கொள்ள மில்க்வைற் நீல சோப் மேலுறைகள் 300 அல்லது பணம்/காசுக்கட்டளை ரூபா 50/- அனுப்பிப் பதிவுசெய்துகொள்ளவும். மில்க்வைற்-யாழ்ப்பாணம். (எ-836)


---

## சனசமூக நிலையங்களின் புனரமைப்பு - கலந்துரையாடல்

இடம்: கைலாசபதி அரங்கு,
பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்

காலம்: 26-10-90
காலை 10.00 மணி

அழைக்கப்படுவோர்: சகல சனசமூக நிலையங்களின் தலைவர்கள், செயலாளர்கள், சனசமூக நிலையங்களின் சமாஜ, சம்மேளன அங்கத்தவர்கள், பிரதேச சபை அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள். உபஅலுவலகப் பொறுப்பதிகாரிகள், சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

இதில் பங்குபற்றாத சனசமூக நிலையங்கள், சம்மேளனம், சமாஜங்கள். இயங்கவில்லையெனக் கருதப்பட்டு ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை சம்பந்தப்பட்டோர் கவனத்திற்கொள்ளவும்.

சு. டிவகலாலா,

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ். மாவட்டம்,
யாழ்ப்பாணம்.

(எ-834)

# சக்திமிக்க நிறை உணவு

இறக்குமதிப் பொருட்கள் என்ருலே எமது மக்கள் உள்ளத்தில் அதுவும் மங்கையர் மனதில் இனமறியாத பூரிப்பு தாளுகவே மலர்ந்துவிடும்

ரி.வி., டெக், வாளெலி, பிரிஜ், ஆடை அணிகலன்கள் இத்தியாதி......

எண்ணிறந்த வெளிநாட்டு பொருட்களின் இறக்குமதியால் 'இருக்கும் மதியை'யும் இழந்து மக்கள் தவிக்கும் தவிப்பு இக்கட்டான காலங்களில் தான் இதயங்களைத் தாக்கமாக உதைப்பதுண்டு

அத்தியாவசிய தேவைகளிலாவது வளமுடைய எமது வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் தன்னிறைவு கண்டு தனித்துவமாக வாழவேண்டியதன் அவசியத்தை எமது மக்கள் உதாசீனம் செய்தமையின் காரணமாக உருவாகியுள்ள அவலத்தை இன்று நாம் அனுபவித்து வருகின்ருேம்.

அன்று "ஏ! அதைத் தொடாதே அது பாடை ஒட்டும் பசைமா" என்று பாட்டி அதட்டி பூட்டப்பிள்ளைகளை தடுத்துவைக்க காரணமான அதே பசைமா இன்று தென் பகுதியிலிருந்து இறக்குமதி செய்யப்படவில்லையென்ருல் நவீன காலத்து பேரன்மார்கள் பாண் இல்லையா? என்று பதறித் துடிக்கும் அளவுக்கு நமது குடும்பப் பெண்கள் தமது வழித்தோன்றல்களை திசை மாற்றிவிட்டனர்.

பரம்பரையாக நம்மவர் வாழ்ந்தது பசைமாவிலா? அல்லது ஆயுள்காலம் முழுவதும் அசைக்கமுடியாத தசைநார் முறுக்கேறிய உடல் உறுதிக்கு உத்தரவாதம் அளிக்கும் உள்ளூர் 'மா' வகைகளிலா?

நாட்டரிசி குரக்கன்மா, ஒடியல், மரவள்ளி மா வகைகள் உடல் உறுதிக்கு மட்டுமல்ல நீரிழிவு உட்பட பல்வேறு நோய்களையும் விரட்டியடிக்கும் சக்தியுள்ள 'நிறை உணவு' வகைகளாகும்.

கொஞ்சமாவது சிந்தித்து பாருங்கள்! இறக்குமதியாகும் போலி உணவு வகைகளின் மோகமும், இலேசாக வாங்கி உண்ணக் கொடுத்து அற்ப சுகம் காணும் குடும்பத் தாய்மாரின் பலவீனமும் எமது பரம்பரையை எங்கோ கொண்டு போய்விட்டது!

முக்கியமான விடயங்களில் சிலருக்கு தாளுகவே நல்லுணர்வு உதிப்பதுண்டு, பலருக்கு பலதும் உறைக்க உணர்த்தப்படவேண்டும்:

தாய்மார்களே! அந்த 'அம்'மா வகைகளின் அருமை, பெருமை, இதயபூர்வமான 'அழைப்பு' உங்கள் உள்ளங்களைத் தொட்டுவிடாதா?

'மயூரன்'

---

அத்வானி கைதின் எதிரொலி;

# வடக்கே சில மாநிலங்கள் ஹர்த்தாலால் பாதிப்பு

## - தெற்கில் பாதிப்பில்லை -

(புதுடில்லி)

பாரயதீய ஜனதா கட்சி நேற்று விடுத்த நாடுதழுவிய ரீதியிலான ஹர்த்தால் வட மாநிலங்கள் சிலவற்றையே பாதித்தாகவும் தெற்கே எந்த வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இராம ஜன்மபூமி தொடர்பான சர்ச்சையையடுத்து திரு. அத்வானி நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து நாடு முழுவதும் ஹர்த்தாலுக்கு பி. ஜே. பி. அழைப்பு விடுத்திருந்தது எனினும் உத்தர பிரதேஷ் பீஹார், மத்திய பிரதேஷ், குஜராத் மாநிலங்களிலேயே குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தியது.

இந்த ஹர்த்தால் அழைப்பினையடுத்தும், தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை அடுத்தும் நாடு முழுவதும் இராணுவமும். பொலிசாரும் உசார் படுத்தப்பட்டுள்ளனர். இதேவேளை குஜராத்தில் நான்குபேர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டதாகவும் கலவரத்தைத் தடுக்கப் பொலிசார் சுட்டதில் ஒருவர் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது. வடக்கே சில மாநிலங்களில் பாடசாலைகள் காலவரை இன்றி மூடப்பட்டுமுள்ளன.

நேற்று பாரதீய ஜனதா கட்சியினதும், அதன் ஆதரவு கட்சியினதும் தொண்டர்கள் சுமார் 10,000 பேர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

---

சர்ச்சைக்குரிய

# ராமர் ஜன்ம பூமி - பாபர் மசூதி ஆதிமுதல் அடிக்கல் வரை....

இந்திய மத்திய அரசுகளுக்கு காலம் காலமாக நெருக்கடியை கொடுத்து ஆட்சிகளை கவிழ்த்து வரும் இராமர் ஜன்மபூமி - பாபரி மசூதி பிரச்னை இன்று தேசிய முன்னணி அரசையும் விட்டுவைக்கவில்லை.

இப்பிரச்னை தொடர்பாக முக்கிய வரலாற்று அம்சங்கள் இங்கு தொகுத்து தரப்பட்டுள்ளது.

*1885 ஜனவரி:* மசூதிக்கு வெளியே இராமர் கோயில் கட்ட ஒரு இந்து பூசாரி பைஜாபாத் நீதிமன்றில் அனுமதி கேட்கிருர்.

*1885 பெப்ரவரி:* மசூதிக்கு அருகில் கோயில் கட்ட கோரப்படுவதால் இதற்கு துணை நீதிபதி அனுமதி மறுக்கிருர்.

*1886 மார்ச்:* இந்த மாவட்ட நீதிபதியும் கோயில் கட்ட அனுமதி மறுக்கிருர்.

*1946 மார்ச்:* இந்த மசூதி முஸ்லிம்களுக்கு பொதுவான சொத்தென சிவில் நீதிபதி தீர்ப்பொன்றில் தெரிவிக்கிருர்.

*1949 டிசப்பர்:* இந்துக்கள் அணி திரண்டு ராமர் சிலையை பல வந்தமாக மசூதி உள்ளே வைக்கிருர்கள். பிரதான கேட் மூடப்பட்டது.

*1950 ஜனவரி:* சர்ச்சைக்குள்ளான இந்த இடத்தை அரசு சுவீகரித்தது; எனினும் குறிப்பிட்ட பகுதிவரை மட்டுமே சென்று பூசை செய்ய இந்துக்களை அனுமதிக்கிறது.

*1961 டிசம்பர்;* மசூதியையும் அதை சுற்றியுள்ள பகுதியொன்றையும் கேட்டு வக்கப் போர்ட் (முஸ்லிம் மதகுழு) வழக்கு தாக்கல் செய்கிறது.

*1984 யூன்:* விஸ்வ ஹிந்து பரிசத், ராம ஜன்ம பூமி, இந்த இடத்தை மீட்டெடுக்க 'விடுதலை வேள்விக் குழு' என்ற அமைப்பை அமைக்கிறது.

*1986 பெப்ரவரி:* மாவட்ட நீதிபதி மசூதி பூட்டை திறக்க உத்தரவிடுகிருர். இந்துக்கள் தங்கு தடையின்றி போய்வருகிருர்கள்.

*1989 பெப்ரவரி:* இராமர் கோயில் கட்டப்போவதாக விஸ்வஹிந்து பரிஷத்தும், இந்துமத துறவிகளும் அறிவிக்கிருர்கள்.

*ஆகஸ்ட்:* அது அது அந்தந்த இடத்தில் இருக்கட்டுமென உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கிறது.

*செப்டெம்பர்:* இந்த உத்தரவை ஏற்று செயல்படுவதாக விஸ்வஹிந்து பரிஷத் ஒப்புக்கொண்டு அரசுடன் உடன்பாடு செய்கிறது.

*நவம்பர் 2:* சர்ச்சைக்குரிய பகுதியில் விஸ்வஹிந்து பரிஷத் கொடி ஒன்றை நாட்டுகிறது.

*நவம்பர் 7:* இந்த இடம் சர்ச்சைக்குரியதுதான் என மீண்டும் உயர்நீதிமன்றம் தெளிவாக்குகிறது.

*நவம்பர் 9:* இராமர் கோயிலை கட்ட 'பாரதீய ஜனதா கட்சி'யுடன் விஸ்வஹிந்து பரிஷத் மசூதிக்கு முன்பாக 192 அடி இடைவெளியில் அத்திவாரம் இடுகிறது.

*1989 நவம்பர் 27:* இங்கு. கோயில்கட்ட விரும்புவதாக புதிய பிரதமர் திரு. வி. பி. சிங்கும் குறிப்பிடுகிருர்.

*1990 அக்டோபர் 22:* இராமர் கோயில் கட்டுமாணப் பணிகளை மேற்கொள்ள பாரதீய ஜனதாகட்சி தலைவர் திரு. அத்வானி, விஸ்வஹிந்து பரிஷத்துடன் ரதபவனி தொடங்குகிருர்.

*1990 அக்டோபர் 23:* திரு. அத்வானி உட்பட அனைவரும் கைதுசெய்யப்படுகிருர்கள். (சி)

---

# ஓய்வூதியம் பெறமுடியாது ஓய்வூதியர் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாவில் உள்ளூராட்சி சேவை ஓய்வூதியம் பெறுவோர் 1990 ஜூலை மாத ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்ளமுடியாத பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

செப்டம்பர் வரைக்குமான ஓய்வூதிய வவுச்சர்கள் குறிப்பிட்ட ஓய்வூதியகாரர்களுக்கு கொழும்பிலிருந்து தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்ட போதிலும் வங்கிகளுக்கு ஓய்வூதிய அட்டவணை இன்னமும் வந்து சேராமையினலேயே ஓபவூதியம் பெறமுடியாதுள்ளது.

---

பாதிக்கப்பட்டவர்களுக்கு

# தெல். ப. நோ. கூ. சங்கம் விசேட நிவாரணம்

(காங்கேசன்துறை)

சிறிலங்கா படைகளின் இராணுவ நடவடிக்கையினல் உடமைகள் யாவற்றையும் கைவிட்டு உடுத்த உடுப்புடன் வெளியேறி நிர்க்கதியாகியுள்ள பொதுமக்களுக்கு தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் விசேட நிவாரணம் வழங்கிவருகிறது.

இணுவில் மஞ்சத்தடி விவேகானந்த சனசமூக நிலையத்தில் கிளை ஒன்றை அமைத்து இந்த நிவாரணம் வழங்கப்படுகிறது.

குடும்ப அங்கத்தவர் ஒருவருக்கு 750 கிராம் அரிசி, 500 கிராம் மா, 300 கிராம் சீனி, 50 கிராம் பருப்பு என்ற அடிப்படையில் இவ்விசேட நிவாரணம் வழங்கப்படுகிறது. (86)

---

சட்ட வல்லுநர்களுடன்

# அரசியல் சிக்கலை தீர்க்க ஜனதிபதி வெங்கட்ராமன் ஆலோசனை

(புதுடில்லி)

இந்திய அரசியலில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை அடுத்து ஜனதிபதி திரு. வெங்கட்ராமன் சட்டமா அதிபருடனும், சட்டவல்லுநர்களுடனும் கலந்தாலோசனைகளை மேற்கொண்டுள்ளார்.

தேசிய முன்னணி அரசுக்கு வழங்கிவந்த ஆதரவை பாரதீய ஜனதாகட்சி விலக்கிக் கொண்டதையடுத்து திரு. வி. பி. சிங்கின் அரசு பெரும்பான்மை பலத்தை இழக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. எனினும் தமது பெரும்பான்மை பலத்தை பாராளுமன்றில் தம்மால் நிரூபிக்க முடியுமென்றும் திரு.சிங் தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மை பலத்தை திரு. சிங் நிரூபிக்கத் தவறும் பட்சத்தில் பாராளுமன்றத்தை கலைப்பதா அல்லது இடைக்கால அரசொன்றை நிறுவுவதா அல்லது தனிப் பெரும்பான்மை பலமுள்ள காங்கிரஸிடம் ஆட்சியை அமைக்குமாறு அழைப்பு விடுப்பதா என்றும் ஆராயப்பட்டுவருகிறது.

எனினும் 89ல் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டு இன்னமும் ஒரு வருடமும் முற்றுப்பெருத நிலையில், உடனடியாக புதிய தேர்தலை நடாத்த முடியாத நிலையுமுள்ளது. திரு. சிங் கடந்த 11மாதமாக ஓர் தென் தட்டு நிலையிலேயே அரசை செலுத்தியுள்ளதாகவும் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாருன நிலை ஏற்படினும் அடுத்த மாதம் 2ம் திகதி பாராளுமன்றம் கூடும்போதே தமது பலத்தை தாம் நிரூபிப்பதாகவும் உடனடியாக பாராளுமன்றத்தை கூட்டவேண்டியதில்லையென்றும் பிரதமர் திரு. சிங் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் திரு. சிங்கின் அரசுக்கு தங்கள் முழு ஆதரவும் தொடர்ந்தும் உண்டென கம்யூனிஸ் கட்சிகளும் ஏனைய பல உதிரிக்கட்சிகளும் பிரதமரை நேரில் சந்தித்து உறுதியளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

---

வி. பி. சிங்கின் அரசை

# உடனடியாக கலைத்து புதிய தேர்தலை நடாத்துக இ. காங்கிரஸ் கோரிக்கை

(புதுடில்லி)

இந்திரா காங்கிரஸ் கட்சியின் குழு திரு. நரசிம்மராவ் தலைமையில் ராஷ்டிரபதியைச் சந்தித்து,தேசிய முன்னணி சிறுபான்மை அரசாக உள்ளதால், வி. பி. சிங் தொடர்ந்தும் பிரதமர் பதவியில் இருக்க நியாயமில்லையெனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் செய்தித்துறைப் பேச்சாளர் திரு. எம். கார்க்கில் செய்தியாளர்களுக்குத் தகவல் தருகையில், பதினெரு மாதம் ஆட்சி செய்த வி. பி. சிங் அரசு இந்தியாவின் வகுப்பு ஒற்றுமையைக் குலைத்து, நாட்டில் அமைதியைக் குலைத்து இனங்களுக்கிடையில் அவநம்பிக்கையைத் தோற்றுவித்துவிட்டது. இனியும் இவர்கள் பதவியில் இருக்க நியாயமில்லை எனக் குறிப்பிட்டார்.

பிரதமர் திரு வி. பி. சிங் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியில் நெருக்கடியான ஒரு நிலையில் சகல மக்களும் அமைதியைக் காத்து வகுப்பு ஒற்றுமையைப் பேணுமாறு கோரியுள்ளார்.

திரு. பி. வி. நரசிம்மராவ் தலைமையிலான ஏழு பேர் கொண்ட குழு ஜனதிபதி திரு. ஆர். வெங்கட்ராமனைச் சந்தித்து அரசைக் கலைக்குமாறும் கோரிக்கை விடுத்தது. மேலும் தற்போதைய நிலையில் காங்கிரஸ் நிலைப்பாடு குறித்தும் குழுவினர் ஜனதி

(4-ம் பக்கம் பார்க்க)

மயிலிட்டியில்

# 2000 மீனவ குடும்பங்கள் தொழிலின்றி பாதிப்பு!

(காங்கேசன்துறை)

''கடற்றொழிலை நம்பி வாழ்ந்த மயிலிட்டியைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் குடும்பங்கள் தொழிலையும் இழந்து தமது, தமது இருப்பிடங்களையும் விட்டு வெளியேறிப் பெரும் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளனர். ஆகவே இம்மக்களுக்கு உதவிகள் வழங்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்'' என்று மயிலிட்டி கிராமியக் கடற்றொழில் சமூக அமைப்பு யாழ். அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

1983ம் ஆண்டிலிருந்து பல விதத்திலும் பாதிக்கப்பட்டு வரும் இம்மக்களின் டரிதாப நிலையைப் போக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறும் மேற்படி அமைப்புக் கோரியுள்ளது. (86)

---

## பாகிஸ்தானில் அமைதியான தேர்தல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில், இராணுவத்தின் பலத்த சட்டுக்காவலுடன் பொதுத் தேர்தல் மிக அமைதியாக நடைபெற்றது.

217 தொகுதிகளுக்கு 1,330 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். அகமபாத் தொகுதியில் போட்டியிட்ட முன்னாள் பிரதமர் திருமதி பெனுஸிர் பூட்டோ மீண்டும் ஆட்சி பீடம் ஏறும் வாய்ப்பு இருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

---

இன்று மாவீரர்

## கலாசாரப் போட்டி இ திநாள்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நவம்பர் மாதம் 27ம் திகதி 'மாவீரர்' தினமாகும்.

இதனையொட்டி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி நடத்தும் மாவீரர்தின கலை, கலாசாரப் போட்டிகளுக்கான இறுதித் திகதி இன்று என்பது குறிப்பிடத்தக்கது. (வி)

---

வவுனியாவில்

## உணவுக் களஞ்சியம் அமைக்க ஏற்பாடு

(மாங்குளம்)

வவனியாவில் உணவுக் களஞ்சியம் ஒன்றை அமைக்க முல்லைத்தீவு அரசாங்க அதிபர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

கப்பலில் வரும் உணவுப் பொருட்கள் பற்றாக்குறையாக இருப்பதனாலும் இப்பகுதியில் போதிய உணவுப் பொருட்கள் களஞ்சியங்களில் இல்லாததினாலும் கொழும்பிலிருந்து உணவுப் பொருட்களை வவனியாவில் உணவுக் களஞ்சியத்தை அமைத்து அதனூடாக முல்லைத்தீவுக்கு உணவுப் பொருட்களைத் தருவிப்பதில் முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. கே. பொன்னம்பலம் வவனியா அரசாங்க அதிபருடன் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். இந் நடவடிக்கையால் இப்பகுதியில் காணப்படும் உணவுத் தட்டுப்பாடு நீங்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (150)

---

### காயமடைந்தோர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வல்லிபுரம் (28) சங்கத்தானை, எஸ். சிவசக்தியராசா (17) மட்டுவில், எஸ். பூபாலசிங்கம் (42) மட்டுவில், எம். திலகர் (24), கோப்பாய்.

எஸ். சிவராசா (25) மட்டுவில், எஸ். திரவியச்செல்வம் (30) சரசாலை. (101)

---

சண்டிலிப்பாயில்

# விமானத்தாக்குதல்

## மூவர் காயம் ஆலயம்சேதம்

(யாழ்ப்பாணம்)

சிரணிச் சந்தியில் நேற்று நண்பகல் 12-30 மணியளவில் நடைபெற்ற பொம்மர் தாக்குதலில், மூவர் காயமடைந்துள்ளதுடன், இரு வீடுகளும்; அரிசி ஆலை ஒன்றும் சேதம் அடைந்தன.

இத்தாக்குதலின்போது கல்வளைப்பிள்ளையார்கோவிலுக்கு அருகாமையில் உள்ள இரு வீடுகளும் சேதம் அடைந்தன.

---

### கீரிமலையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வியுடன் கீரிமலை, வீமன்காமம், மாவிட்டபுரம் பகுதிகளில் இராணுவத்தினர் கனரகவாகனங்களுடன் முன்னேற முயன்றபோது, விடுதலைப்புலிகள் இடைமறித்துத் தாக்கியதில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர்.

விடுதலைப் புலிகளின் தரப்பில் கப்டன் ரேமன் வீரமரணமடைந்தார்.

விடுதலைப்புலிகளின் தாக்குதல்களை சமாளிக்க முடியாத இராணுவத்தினர் முன்னேற முயன்ற திட்டத்தை கைவிட்டு பின்வாங்கியதாகவும் மேலும் செய்திகள் தெரிவித்தன. (வி)

---

## ஒருவர் பலி பலர் படுகாயம்

(மட்டுநகர்)

மட்டுநகர் புகையிரத நிலையத்தில் வைத்து, இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் கைக்குண்டு தாக்குதல் மேற்கொண்டதில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயம் அடைந்ததாகவும், புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (வி)

---

### பாரதிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர் கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளார்.

தமிழகத்தில் நேற்று பொதுவாக அமைதி நிலவினாலும் தர்மபுரிமாவட்டத்தில் வாகனங்களுக்கு கல்வீச்சு இடம்பெற்றதுடன் இருகடைகள் தீக்கிரையாக்கப்பட்டன. (அ)

---

சாவகச்சேரி

# குண்டு வீச்சு ஒருபுறம் கொள்ளை மறுபுறம்

(நாவற்குழி)

சாவகச்சேரி சந்தைப் பகுதியில் நேற்று நடந்த திடீர் பொம்மர் தாக்குதலுக்கு அஞ்சி' பதறி, துடித்து ஓடிப் பதுங்கு குழிகளுக்குள் புகுந்த மக்கள், குண்டு வீச்சு ஓய்ந்து மீண்டும் வந்தபோது, சந்தையில் வாங்கிய பொருள்கள், சைக்கிள்கள் கொள்ளையிடப் பட்டுள்ளது கண்டு திகைப்பு படைந்தனர்.

சமூக விரோதச் சக்திகள், சந்தைப் பகுதியில் நடமாடி, குண்டு வீச்சின்போது உயிருக்கு அஞ்சி ஓடும் மக்களின் பொருள்களைத் தருணம் பார்த்துக் கொள்ளையடிப்பதில் தமது கைவரிசையைக் காட்டத் தவறவில்லை.

அவசரம் அவசரமாக எடுத்துச் செல்லக்கூடிய பொருள்களை மாத்திரமல்ல, சைக்கிள்களின் உதிரிப் பாகங்களைக் கூட, அகோரக் குண்டுவீச்சின் மத்தியிலும் ஆறஅமரக் கழற்றிச் சென்றிருப்பது கண்டு மக்கள் அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்தனர். (107)

---

### நீடித்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடி உருவாகியுள்ள இவ்வேளையில் பாராளுமன்றத்தை கூட்டுவதற்குரிய கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளமைக்கு நூறு எதிர்க்கட்சி எம். பிக்கள் இந்திய ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள விண்ணப்பத்தில் கண்டனம் தெரிவித்துள்ளனர். (அ)

---

## படையினர் சுட்டு ஒருவர் பலி

[மட்டுநகர்]

மட்டுநகர் பெரிகளம் பகுதியில் இராணுவத்தினர் பொது மக்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் ஆரியம் பகுதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை பூபாலரத்தினம் (வயது 40) என்பவர் கொல்லப்பட்டதாகத் தெரியவந்துள்ளது.

மேற்படி சம்பவம் நேற்றுப் பகல் நடைபெற்றது. (வி)

---

இரத்த வங்கியில் ஒருவருமில்லை

## இரத்ததானம் செய்ய சென்றவர்கள் திரும்பினர்

[யாழ்ப்பாணம்)

யாழ். போதனு வைத்திய சாலைக்கு இரத்ததானம் செய்யச் சென்ற மூவர் சம்பந்தப்பட்ட இரத்த வங்கியில் அதிகாரிகள் இல்லாமையால் இரத்ததானம் செய்யமுடியாமல் திரும்பினர்.

இச்சம்பவம் நேற்றுமுன் தினம் மாலை இடம்பெற்றது.

பத்திரிகையில் இரத்ததானம் செய்யுமாறு கோரியதையடுத்து தாம் பெரு விருப்பத்தோடு சென்றதாகவும் அங்கு எவரும் இல்லாததால் கவலையுடன் திரும்பியதாகவும் தெரிவித்தனர். (ச)

---

### வி. பி- சிங்கின்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பதிக்கு விளக்கிக் கூறியுள்ளனர்.

தேசிய முன்னணி அரசு கவிழும் பட்சத்தில் காங்கிரஸ் ஆட்சி அமைக்கும் வாய்ப்பு இருக்கின்றபோதிலும் புதிய தேர்தல் ஒன்றின் மூலமே தாம் ஆட்சியைக் கைப்பற்ற விரும்புவதாகவும் உடனடியாக பரராளுமன்றம் கலைக்கப்பட்டுத் தேர்தல் நடாத்தப் படவேண்டுமென்றும் திரு. ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார், (ச-சி)

---

## நகருக்கு திரும்புகின்றனர்

(யாழ்ப்பாணம்)

இராணுவ அனர்ந்தங்களால் யாழ். நகரை விட்டுச் சென்ற மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் சேதமடைந்த தமது வீடுகளை புனரமைப்பதிலும் தமக்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதிலும் ஈடுபட்டுள்ளனர். (க)

---

தீவுப் பகுதியில்

## போர் விமானங்களின் நடமாட்டம் அதிகரிப்பு

(புங்குடுதீவு)

நெடுந்தீவு, நயினாதீவு, புங்குடுதீவு மண்டைதீவு, அல்லைப்பிட்டி ஆகிய பகுதிகளின் கடல் பிராந்தியங்களின் மேலாக சீபிளேன், பொம்மர், ஹெலி போன்றவற்றின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

இதனால் அப்பகுதிகளிலுள்ள மக்கள் பெரும் அச்சத்திற்குள்ளாகி வருகின்றனர். (101)

---

## வதிவிடங்கள் சேதம்

(வவுனியா)

வவுனியாவில் சேவையாற்றும் அரச திணைக்கள உத்தியோகத்தர்கள், வதிவிட வசதிகள், உணவு வசதிகள் இன்றியும் பெரும் சிரமப்படுகிறார்கள்.

அரச ஊழியர்களின் வதிவிடங்கள் யாவும் சேதமடைந்தும், பொருள்கள் கொள்ளையிடப்பட்டது காரணமாகவும் அரச ஊழியர்கள் அல்லற்படுகிறார்கள். (153)

---

### சாவகச்சேரி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தொங்கியுள்ளன;

சாவகச்சேரி- கண்டிவீதியில் சென்றுகொண்டிருந்த சூரன் ஊர்வலத்தின்மீது நடத்தப்பட்ட தாக்குதலில் க. நல்லையா, சே. கனகரத்தினம் ஆகியோரின் வீடுகள் சேதமடைந்தன.

கச்சாய் றோட் சந்தியில் திருக்கணிதம் அச்சகம், அற்லஸ் மெடிக்கல் ஹோல் உட்பட இருபது கடைகள் சேதமடைந்தள.

முதல் தடவையாக ஆறு குண்டுகளை வீசிவிட்டுச் சென்ற பொம்மர்கள் மீண்டும் பதினொரு மணியளவில் வந்து மூன்று குண்டுகளை வீசியது. இதனால் ஏழு பொதுமக்கள் காயமடைந்தனர்;

### மட்டுவில், சரசாலை

இதே நேரம் மட்டுவில், சரசாலைப் பகுதிகளில் பொம்மரிலிருந்து குண்டுகள் வீசப்பட்டன.

இக்குண்டு வீச்சினால் மட்டுவில் பகுதியில் மருதடிப்பிள்ளையார் கோயில் சேதமடைந்துள்ளதுடன் இருவர் காயமடைந்தனர்.

சரசாலையில் நடத்தப்பட்ட தாக்குதலில் [illegible]னஞ்சினி தொழிற்சாலை உட்பட மூன்று வீடுகள் சேதமடைந்தன.

சாவகச்சேரி சந்தைப்பகுதியில் பொம்மரின் இரைச்சல் கேட்டதும் பாதுகாப்பு மணி அடிக்கப்பட்டதால் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்திருந்தமையால் பலத்த உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (107)

---

### பிரதமர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளையில் முன்னாள் உதவிப் பிரதமரும் ஹரியானு மாநில முதலமைச்சர் பதவிப் போட்டியில் திரு. வி. பி. சிங்குடன் சர்ச்சைக்குள்ளாகி இருந்தவருமான திரு. தேவிலால் தேசியமுன்னணி அரசுக்கு தொடர்ந்து தமது உறுதியான ஆதரவை வழங்க விருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

தேசிய முன்னணி அரசைக் கட்டிக்காக்க அதன் மூத்ததலைவர்கள் ஆள்அணி திரட்டும் பணியில் தீவிர முயற்சி எடுத்துவர புதுடில்லிக்கு விரைந்துள்ளனர். (அ)

---

# திருமலை இந்து ஆலயங்களில் விக்கிரகங்கள் திருட்டு

(கொழும்புத்துறை)

திருகோணமலை மாவட்டத்தில் இந்து ஆலயங்களிலுள்ள மூல விக்கிரகங்கள், எழுந்தருளிகள் என்பனதேசவிரோத சக்திகளால் திருடப்பட்டுள்ளன.

தம்பலகாமம் அருள்மிகு சிவன்கோவில், ஸ்ரீகிருஷ்ணன் கோவில், அருள்மிகு சனீஸ்வரன் ஆலயம், அருள்மிகு மாரியம்மன் ஆலயம் என்பனவற்றிலுள்ள அனேக விக்கிரகங்களே திருடப்பட்டுள்ளனவாகும்.

இக்கோவில்களை அண்டியுள்ள பகுதி அனேக வீடுகள் யாவும் 'மோட்டார் கிரேட்டரால்' உடைத்தெறியப்பட்டுள்ளன.

இதேவேளை தம்பலகாமம் பாலம்போட்டாறு அருள்மிகு பத்திரகாளிஅம்மன் கோவிலை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் ஆக்கிரமித்துக்கொண்டுள்ளதுடன் அதன் சுற்றுப் புறத்திலிருந்த மக்களின் பல வீடுகளை புல்டோசரினால் அழித்துள்ளனர் என இங்கிருந்து வந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு ஐப்பசி மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.